RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்-43 | 14 பிப்ரவரி | வெள்ளிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## ‘காலத்தால் அழியாத சக்தி வாய்ந்த ஊடகம்’ வானொலி நாளில் பிரதமர் மோடி நெகிழ்ச்சி

புதுடெல்லி, பிப்.14

உலக வானொலி நாளான நேற்று (பிப்.13) அதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் விதமாக ‘உலகெங்கும் உள்ள மக்களை இணைக்கும் சக்தி வாய்ந்த ஊடகம்’ என்று பிரதமர் மோடி புகழ்ந்துள்ளார்.



இதுகுறித்து தனது எக்ஸ் பக்கத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், “உலக வானொலி நாள் வாழ்த்துகள். மக்களுக்கு தகவலை அளித்தல், உற்சாகமளித்தல், மக்களை இணைத்தல் என பலருக்கும் காலத்தால் அழியாத சக்திவாய்ந்த ஊடகமாக விளங்குகிறது. வானொலி உலகத்துடன் தொடர்புடைய அனைவரையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். அதேபோல் பிப்.23ம் தேதி நடைபெற இருக்கும் மனதின் குரல் நிகழ்ச்சியில் உங்கள் கருத்துகளையும், அதற்கான உள்ளீடுகளையும் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.

கடந்த 2014ம் ஆண்டு அக்டோபர் மாதம் 3ம் தேதி முதல் முதலாக ஒலிபரப்பப்பட்ட மனதின் குரல் நிகழ்ச்சி, அகில இந்திய வானொலி நிலையத்தில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளில் பரவலான மக்களால் விரும்பிக் கேட்கப்படும் ஒன்றாக உள்ளது. இதில், தேசிய மற்றும் சமூக முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்து நாட்டுமக்களுடன் பிரதமர் மோடி உரையாடி வருகிறார்.

உலக வானொலி தினம் கடந்த 2011ம் ஆண்டு யுனெஸ்கோ உறுப்பு நாடுகளால் அறிவிக்கப்பட்டது. பின்பு 2012ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொதுச்சபையால் சர்வதேச தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தகவல்கள், கலாச்சாரம் மற்றும் சமூக உரையாடல்களை உருவாக்குவதில் முக்கியமான தளமாக விளங்கும் வானொலியின் பங்கினை அங்கீகரிக்கும் விதமாக இந்த தினம் முதல் முதலாக பிப்.13ம் தேதி கொண்டாடப்பட்டது. தொலைக்காட்சி, ஸ்மார்ட் போன்களின் வளர்ச்சிக்கு மத்தியில், வெகு மக்கள் தொடர்பில வானொலி ஒரு தனித்துவமான பங்கினை வகித்து வருகிறது. அது மக்களுக்கு செய்திகள், பொழுது போக்கு மற்றும் கல்வியில் முக்கியமான ஆதாரமாக விளங்கி வருகிறது.

அதிலும் குறிப்பாக ‘கம்யூனிட்டி ரேடியோ’ எனப்படும் சமூக வானொலிகள், பிரதிநிதித்துவப்படுத்தப்படாத குரல்களை வெளியே கொண்டு வருவதிலும், காலநிலை மாற்றம் உள்ளிட்ட சமூக மற்றும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் விழிப்புணர்வினை ஏற்படுத்துகிறது.

சர்வதேச வானொலி தினம், இன்றும் நீடித்து வரும் வானொலியின் தேவை, உரையாடல்கள் உருவாக்குவதில் அதன் பங்கு, புவியியல் மற்றும் கலாச்சார எல்லைகளைக் கடந்து மக்களை ஒன்றிணைக்கும் அதன் திறனையும் நினைவூட்டுகிறது.

## அண்ணாமலையால் அறிவாலயத்தின் சுவரைக் கூட தொட முடியாது.. அமைச்சர் சேகர்பாபு பதிலடி!

சென்னை, பிப்.14



சென்னை திருவான்மியூரில் பாஜகவின் பட்ஜெட் விளக்க பொதுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் பேசிய தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, தமிழ்நாட்டு பாஜகவின் தலைவர் பதவியில் இருந்து செல்லும் போது திமுகவின் தலைமையகமான அண்ணா அறிவாலயத்தில் உள்ள ஒவ்வொரு செங்கல்லையும் எடுக்காமல் விடமாட்டேன் என்றார்.

மேலும் தமிழக ஆளுநராக ஆர்என் ரவியும் தமிழக பாஜக தலைவராக அண்ணாமலையும் இருக்கவேண்டும் என முதல்வர் ஸ்டாலின் ஆணவத்தின் உச்சத்தில்தான் பேயுள்ளார் என்றும் அண்ணாமலை காட்டமாக கூறினார். அண்ணமலையின் இந்த பேச்சுக்கு திமுக தலைவர்கள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

அண்ணாமலை அறிவாலயத்தின் சுவரை தொட்டுப்பார்க்கட்டும் என்றும் சவால் விட்டு வருகின்றனர். இந்நிலையில் அமைச்சர் சேகர் பாபு அண்ணாமலைக்கு பதிலடி கொடுத்துள்ளார். சென்னை அம்பத்தூரில் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் சேகர் பாபு, திமுக தொண்டர்கள் தமிழ்நாட்டிலேயே பிறந்து தமிழ்நாட்டிலேயே வளர்ந்து தமிழ்நாட்டு அரசியலை கரைத்துக் குடித்தவர்கள்,

அண்ணாமலையை போல் இறக்குமதி செய்யப்பட்டவர்கள் அல்ல. திமுகவின் ஆலயமாக கருதப்படுகிற அறிவாலயத்தை தொட்டு கூட பார்க்க முடியாத அவரால் எப்படி செங்கல்லை பிடுங்க முடியும். இரும்பு மனிதர் என போற்றப்படுகின்ற முதலமைச்சர் ஸ்டாலின் தலைமையில் 75 ஆண்டுகள் கடந்த திராவிட முன்னேற்ற கழகத்தை அசைத்துப் பார்க்க இன்னொருவர் பிறந்துதான் வரவேண்டும்.


திமுகவை அழிக்க புறப்படுபவர்கள், தங்களின் அழிவுக்கு தொடக்கப்புள்ளி வைக்கின்றனர். இவருடைய ஆணவப் பேச்சுக்கு தமிழக மக்கள் 2026 சட்டமன்ற தேர்தலில் மிருக பலத்தோடு திராவிட முன்னேற்றக் கழகத்தை மீண்டும் ஆட்சியில் அமர வைப்பார்கள். முதலில் 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட்டு சட்டமன்ற உறுப்பினராக தன்னை நிலை நிறுத்திக் கொள்வதற்கான முயற்சிகளை அண்ணாமலை மேற்கொள்ள வேண்டும்.

அவர் எங்கு நின்றாலும் தமிழ்நாட்டில் அவரே புறமுதுகிட்டு ஓடச்செய்ய திமுக கடைகோடி தொண்டனை நிற்க வைத்து முதல்வர் ஸ்டாலின் அவரை மண்ணை கவ்வ வைப்பார்.. இவ்வாறு அமைச்சர் சேகர் பாபு, தமிழக பாஜக தலைவர் அண்ணாமலைக்கு பதிலடி கொடுத்துள்ளார்.

## கமலுக்கு விரைவில் மாநிலங்களவை எம்.பி. பதவி?

சென்னை, பிப்.14

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசனை நேற்று அமைச்சர் சேகர்பாபு சந்தித்தார். உடன் பொதுச் செயலாளர் ஆ.அருணாச்சலம்.



மநீம தலைவர் கமல்ஹாசனை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு நேற்று திடீரென சந்தித்துப் பேசினார்.

மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவரான நடிகர் கமல்ஹாசன் கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் கோவை தெற்கு தொகுதியில் போட்டியிட்டு குறைந்த வாக்கு வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். அதன் பிறகு கடந்த மக்களவை தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்தார். திமுக கூட்டணி சார்பில் மக்களவை தேர்தலில் கமல்ஹாசன் போட்டியிடுவார் என பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர் போட்டியிடவில்லை. அவர் திமுக கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழகம் முழுவதும் தீவிர பிரச்சாரம் செய்தார். கூட்டணியின்போது அவருக்கு மாநிலங்களவை எம்பி பதவி வழங்கப்படும் என உடன்பாடு செய்யப்பட்டது. மக்களவை தேர்தலில் திமுக கூட்டணி அமோக வெற்றிபெற்று 39 இடங்களையும் கைப்பற்றியது. தேர்தலுக்கு பிறகு கமல்ஹாசன் தீவிர அரசியலில் ஆர்வம் காட்டவில்லை. ஏதேனும் பொது பிரச்சினைகள் என்றால் அதுதொடர்பாக கருத்து தெரிவிப்பதோடு சரி. பெரிய அளவில் கட்சி பணிகளில் அவர் ஈடுபடுவது இல்லை.

இந்நிலையில், மநீம தலைவர் கமல்ஹாசனை சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள அவரது அலுவலகத்தில் இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு சந்தித்துப் பேசினார். இது மரியாதை நிமித்தமான சந்திப்பு என்று மநீம தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக மநீம வெளியிட்ட செய்திக்குறிப்பில், “தமிழக இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மநீம தலைவர் கமல்ஹாசனை அவரது அலுவலகத்தில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இச்சந்திப்பின்போது கட்சியின் பொதுச்செயலாளர் ஆ.அருணாச்சலம் உடனிருந்தார்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மநீம தலைவர் கமல்ஹாசனுடனான திடீர் சந்திப்பு குறித்து அமைச்சர் சேகர்பாபுவிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, தேர்தல் தொடர்பான சந்திப்பா? என்று கேட்கிறீர்கள். சட்டப்பேரவை தேர்தலுக்கு இன்னும் 14 மாதங்கள் இருக்கின்றன” என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லிவிட்டு வடசென்னை தொடர்பான வேறு கேள்விகளுக்கு பதில் அளிக்க தொடங்கினார். கமல்ஹாசனை சந்தித்தது குறித்து அவர் வேறு எந்த தகவலையும் தெரிவிக்கவில்லை.

இதற்கிடையே, திமுக கூட்டணியில் உள்ள மநீம தலைவர் கமல்ஹாசனை, அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு நேற்று திடீரென்று சந்தித்து பேசியது குறித்து அரசியல் வட்டாரத்தில் புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன. விரைவில் திமுக எம்எல்ஏக்கள் உதவியுடன் கமல்ஹாசன் மாநிலங்களவை எம்பியாக தேர்வுசெய்யப்பட இருப்பதாக அத்தகவல்கள் கூறுகின்றன.

## தமிழ்நாட்டுக்கு நிதி வழங்கக்கோரி டெல்லி சென்று மனு கொடுத்த அமைச்சர் தங்கம் தென்னரசு

புதுடில்லி, பிப்.14



தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு புதுதில்லியில், ஒன்றிய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் பூபேந்தர் யாதவ்வை சந்தித்து, தமிழ்நாடு அரசின் பல திட்டங்களுக்கு அனுமதி மற்றும் நிதி கோரி கோரிக்கை மனு அளித்தார். இந்நிகழ்வின்போது சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹூ உடனிருந்தார்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்தும் நோக்கில், 1,50,000 சதுர மீட்டர் பரப்பளவு கொண்ட தொழில்துறை கொட்டகைகளுக்கு சுற்றுச்சூழல் அனுமதியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும் எனும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கோரிக்கையை ஏற்று அறிவிப்பை வெளியிட்டமைக்கு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்ததுடன், ஏப்ரல் 2025 உடன் முடிவுக்கு வரவுள்ள, மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் மற்றும் மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு ஆகியவற்றின் மறுசீரமைப்புக்கான அரசின் முன்மொழிவின் மீது விரைந்து அறிவிக்கை வெளியிடுமாறும் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாட்டில் வளர்ந்து வரும் உட்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு விரைவான அனுமதி வழங்குவதற்கு ஏதுவாக ஒரு கூடுதல் மாநில வல்லுநர் மதிப்பீட்டுக் குழு அமைக்க ஏற்கெனவே அமைச்சகத்திற்கு தமிழ்நாடு அரசு கருத்துருவை சமர்ப்பித்துள்ளது. தமிழ்நாடு அரசின் இந்த முன்மொழிவுக்கு விரைந்து அனுமதி வழங்குவதாக ஒன்றிய அமைச்சர் உறுதியளித்தார்கள்.

மேலும், இக்கலந்துரையாடலின் போது, தூத்துக்குடி மாவட்டத்தில் கடலோர மற்றும் வன சுற்றுச்சூழல் அமைப்புகளை மேம்படுத்துவதற்கான பசுமைக் கவசத்தை உருவாக்குவதற்கான புதிய திட்டத்திற்கு காலநிலை மாற்றத்திற்கான தேசிய செயல்திட்டம் மற்றும் பசுமை இந்தியா இயக்கம் ஆகியவற்றின் கீழ் ரூ.27.53 கோடிக்கு அனுமதி வழங்குமாறு ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை அமைச்சகத்திடம் கோரப்பட்டது. இத்திட்டம் இயற்கை சார்ந்த தீர்வுகள் மூலம் மாவட்டத்தில் பல கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் உள்ள முதுமலை புலிகள் காப்பகத்தின் இடையகப் பகுதியிலிருந்து, தெங்குமரஹாடா கிராமத்தில் வசிப்பவர்களுக்கு மாற்று இடம் வழங்குவதற்கு தேவைப்படும் ரூ.74.4 கோடி ரூபாயை ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் ஈடுசெய் காடு வளர்ப்பு நிதி மேலாண்மை மற்றும் திட்டமிடல் ஆணைய நிதியிலிருந்து வழங்கக்கோரி தமிழ்நாடு அரசு கருத்துரு சமர்ப்பித்துள்ளது. அந்தப் பகுதியில் புலிகள் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும், அடிக்கடி ஏற்படும் மனித வனவிலங்கு மோதல்கள் உள்ளூர் சமூகத்தின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிப்பதையும் கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்கு விரைந்து அனுமதி வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

கோரிக்கை மனுவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மாநில அரசின் முயற்சிகளுக்கு தனது அமைச்சகத்தின் ஆதரவை வழங்குவதாக ஒன்றிய அமைச்சர் உறுதியளித்தார்கள். இந்த சந்திப்பின் போது ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற துறை அமைச்சகத்தின் செயலாளர் தன்மய் குமார் மற்றும் கூடுதல் செயலாளர் நரேஷ் பால் கங்வார் மற்றும் வனத்துறை டைரக்டர் ஜெனரல் சுஷில் குமார் அவஸ்தி ஆகியோர் உடனிருந்தனர்.

## மதுரையில் ஆர்ச்சை இடிக்கும்போது விபத்து தூண் விழுந்து ஜேசிபி ஓட்டுநர் உயிரிழப்பு

மதுரை, பிப்.14

மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையம் அருகில் உள்ள ஆர்ச்சை இடிக்கும்போது தூண் விழுந்து ஜேசிபி வாகன ஓட்டுநர் உயிரிழந்தார்.



மதுரை நகரில் போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் தோரணவாயில்களை இடிக்க சமீபத்தில் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. இதன்படி நேற்று இரவு போக்குவரத்து குறைந்த நிலையில் 10 மணிக்கு மேல் மாட்டுத்தாவணி அருகிலுள்ள நக்கீரர் தோரணவாயிலை இடிக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர்.

அப்போது ஜேசிபி இயந்திரம் மீது இடிந்த தூண் விழுந்ததில் திருமங்கலத்தைச் சேர்ந்த ஜேசிபி ஓட்டுநர் உயிரிழந்தார். ஒப்பந்ததாரர் நல்லதம்பியும் காயம் அடைந்தார்.

முறையான முன்னெச்சரிக்கையும், திட்டமிடலும் இன்றி ஆர்ச் இடிக்கப்பட்டதில் நாகலிங்கம் உயிரிழந்ததாக கூறி அவரது உறவினர்கள் மாட்டுத்தாவணி பகுதியில் மறியலில் ஈடுபட்டனர்.

போலீஸார் அவர்களிடம் சமரசம் செய்து பிறகு உடலை மீட்டு மதுரை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் இந்த சம்பவம் குறித்து மாட்டுத்தாவணி போலீஸார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

## திருப்பரங்குன்றம் மலையை காக்க சென்னையில் வேல் யாத்திரைக்கு அனுமதி கோரி வழக்கு: இடத்தை மாற்ற அறிவுரை

சென்னை, பிப்.14

அறுபடை வீடான திருப்பரங்குன்றம் மலையை காக்க சென்னையில் வேல்யாத்திரை மேற்கொள்ள அனுமதி கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

சென்னை உயர் நீதிமன்றத்தில் பாரத் இந்து முன்னணி வடசென்னை மாவட்ட துணை தலைவர் எஸ்.யுவராஜ் தாக்கல் செய்த மனுவில் கூறியுள்ளதாவது: தமிழ்க்கடவுள் முருகனின் அறுபடை வீடுகளில் முதல் வீடான திருப்பரங்குன்றம் மலையை சிக்கந்தர் மலை என்று கூறி முஸ்லிம்கள் சொந்தம் கொண்டாடுகின்றனர். எனவே, திருப்பரங்குன்றம் மலையை காக்க வேண்டும் என்ற கோரிக்கையுடன் வரும் பிப்ரவரி 18ம் தேதி சென்னை தங்கசாலையில் உள்ள ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் இருந்து கந்தகோட்டம் முருகன் கோயில் வரை வேல் யாத்திரை மேற்கொள்ள அனுமதி வழங்க போலீஸாருக்கு உத்தரவிட வேண்டும். இவ்வாறு அதில் கோரியிருந்தார்.

நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. அப்போது நடந்த வாதம்:

மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் முத்தரசு: இந்துக்களுக்கு சொந்தமான திருப்பரங்குன்றம் மலையை காக்க வேண்டும் என்ற உணர்வை வெளிப்படுத்தும் நோக்கில் சென்னையில் கந்தகோட்டம் முருகன் கோயிலை நோக்கி அமைதியான முறையில் வேல் யாத்திரை மேற்கொள்ள அனுமதி கோரியும், போலீஸார் அனுமதிக்கவில்லை.

காவல் துறை தரப்பில் ஆஜரான மாநில அரசு தலைமை குற்றவியல் வழக்கறிஞர் அசன் முகமது ஜின்னா: திருப்பரங்குன்றம் மலையை காக்க வேண்டும் என்று கோரி சென்னையில் பேரணி செல்ல மனுதாரர் அனுமதி கோருகிறார். ஏற்கெனவே இதற்காக மதுரையில் ஆர்ப்பாட்டம் நடத்திக் கொள்ள உயர் நீதிமன்ற மதுரை கிளை நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியும், பொது அமைதி, மத நல்லிணக்கத்துக்கு குந்தகம் ஏற்படுத்தியதாக பலர் மீது போலீஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர். மனுதாரர் தற்போது வேல்யாத்திரை மேற்கொள்ள அனுமதி கோரும் வழித்தடம் போக்குவரத்து நெரிசல் மிகுந்த பகுதி. திருப்பரங்குன்றம் மலை உரிமை தொடர்பாக ஏற்கெனவே பிரிவியூ கவுன்சில் வரை சென்று முடிவு செய்யப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும் பல்வேறு இடங்களில் இந்துக்களும், முஸ்லிம்களும் மத நல்லிணக்கத்துடன் சமூக ஒருமைப்பாடு, ஒற்றுமையை நிலைநாட்டி வருகின்றனர்.

கோயில் நகரமான மதுரையிலும் இந்துக்களும், முஸ்லிம்களும் ஒரே குடும்ப உறுப்பினர்களாக, சகோதர, சகோதரிகளாக வாழ்ந்து வருகின்றனர். திருப்பரங்குன்றம் மலையை காரணமாக்கி இந்த ஒற்றுமையை குலைத்துவிட கூடாது. கோரிப்பாளையம் தர்காவில் இந்துக்கள் வழங்கும் கொடிதான் இன்று வரை ஏற்றப்படுகிறது. நாகூர் தர்கா கந்தூரி விழாவில் இந்துக்கள் வழங்கும் போர்வைதான் இன்றுவரை பயன்படுத்தப்படுகிறது. பல கோயில்களின் கும்பாபிஷேக விழாவுக்கு முஸ்லிம்கள் சீர்வரிசை, நன்கொடை செய்கின்றனர். பல கிராமங்களில் கோயில் நேர்த்திக் கடன்களையும், அன்னதானமும் செய்கின்றனர். பொது அமைதி, மதநல்லிணக்கம், சமூக ஒற்றுமை பேணப்பட வேண்டும். இவ்வாறு வாதம் நடந்தது.

நீதிபதி: திருப்பரங்குன்றம் மலையை காக்க சென்னையில் பேரணி செல்ல வேண்டிய அவசியம் என்ன? தவிர, மனுதாரர் கோரியுள்ள சவுகார்பேட்டை தங்கசாலை வழித்தடம் நெரிசல் மிகுந்தது. எனவே, வேறு இடத்தை தேர்வு செய்து தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அறிவுறுத்திய நீதிபதி, வழக்கின் தீர்ப்பை நாளைக்கு தள்ளிவைத்துள்ளார்.

மாலை தந்தி

14.02.2025



சிவகங்கை மாவட்டம் மானாமதுரை உட்கோட்ட காவல் சரக்கத்திற்கு உட்பட்ட காவல் நிலையத்தில் நீண்ட காலமாக தேங்கி இருக்கக்கூடிய வழக்குகளை எல்லாம் தீர்வு காணும் விதமாக பெட்டிஷன் மேளா தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.மானாமதுரை காவல் நிலையம் ,சிப்காட் ,திருப்பாச்சேத்தி, திருப்புவனம், பூவந்தி பழையனூர் மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களில் நிலுவையில் இருந்த 277 மனுக்களுக்கு தீர்வு காணப்பட்டது.



மானாமதுரை அருகே உள்ள தீத்தான் பேட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியின் புதிய கட்டிடத்தை முன்னாள் அமைச்சரும் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார் நேற்று ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.உடன் முன்னாள் மானாமதுரை ஒன்றிய பெருந்தலைவர் லதா அண்ணாத்துரை, மானாமதுரை ஊராட்சி ஒன்றியம் ஆணையாளர் மேசியா தாஸ் , வட்டார கல்வி அலுவலர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கிராம பொதுமக்கள் பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் ஆசிரியர்கள் மாணவர்கள் உட்பட பலர் பங்கேற்றனர்..

## 14வது மண்டல ஆலோசனைக் கூட்டத்தில் 186 வது மாமன்ற உறுப்பினர் கேள்விக்கு திணறிய அதிகாரிகள்





புழுதிவாக்கம் பிப்14

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட புழுதிவாக்கம் 14 வது மண்டலம் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. 14வது மண்டல குழு தலைவர், பெருங்குடி, எஸ் .ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புழுதிவாக்கம் 186 வது மாமன்ற உறுப்பினர் ஜே. கே. மணிகண்டன் புழுதிவாக்கம் 186 வது வட்டத்தில் மிகவும் தாமதமாக நடைபெறும் மெட்ரோ வாட்டர் பணிகளால் பொதுமக்களுக்கு ஏற்படும் விபத்துகளுக்கு அரசு அதிகாரிகளின் அலட்சியமே காரணம் என்று கேள்வி பதில் அளிக்க முடியாமல் அரசு அதிகாரிகள் திணறி நின்றனர். மீண்டும் மீண்டும் இது இரண்டாம் விபத்து எனது வட்டத்திற்குள் ஊர் பொதுமக்கள் பாதிக்கப்படும் நிலை காரணம் என்ற கேள்விக்கு தொடர்ந்து கேள்வி கேட்டு விரைவில் பணிகளை முடித்து தருமாறு மனவேதனையுடன் கேட்டுக்கொண்டார். என் ஊர் மக்கள் வரி பணத்தை மக்களுக்கு பயன்படும் வகையில் தாமதப்படுத்தாமல் மெட்ரோ வேதத்தில் முடித்து தர வேண்டும் என்பதே எனது கோரிக்கை என்று கர்ஜனையுடன் கேட்டுக் கொண்ட ஜே.கே.மணிகண்டன் மேலும் இதுபோன்ற விபத்துகள் என் ஊரில் ஏற்படக்கூடாது என்று ஆலோசனைக் கூட்டத்தில் அரசு அதிகாரிகளிடம் கோரிக்கை வைத்தது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் வாழ்த்துக்களுடன், கழக இளைஞரணி செயலாளர், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, வழக்கறிஞர், மேடவாக்கம், சு. கிஷோர், புனித தோமையார்மலை தெற்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளராக கழகத்தில் பணியாற்ற வாய்ப்பு வழங்கியமைக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார் .

## தேனியில் புதிய கால்பந்து கிரிக்கெட் மைதானத்தை துவக்கி வைத்த அமைச்சர்



தேனி, பிப்.14

தேனி மாவட்ட பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஊராக வளர்ச்சிமற்றும் ஊராட்சித்துறை சார்பில் சுமார் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கால்பந்து மற்றும் கிரிக்கெட் மைதானத்தை ஊரக மற்றும் உள்ளாட்சி துறை அமைச்சர் ஐ பெரியசாமி துவக்கி வைத்து பேசுகையில் " துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறையை அதிகமாக கவனிப்பதால் விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்துகிறார். இதனால் விளையாட்டுத்துறையில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக உள்ளது. என்று பேசினார் மேலும் நிருபர்களுக்கு பேட்டியளிக்கும் போது " வருகின்ற 2026 தேர்தலில் ஐந்து முனை போட்டியாக இருக்கும்.மேலும் தற்போது உள்ள கூட்டணிகளை வலுப்படுத்திமீண்டும் ஆட்சியில் அமரும் " என்று சூளுரைத்தார். இந்நிகழ்வை தொடர்ந்து மாற்றுத்தினாளிகளுக்கு மூன்று சக்கர வாகனம், மாற்றுத் திறனாளிகளுக்கு இலவச தையல் மெஷின் , தேனி ஊராட்சி ஒன்றியம் தூய்மை பணியாளர்களுக்கு குப்பை அள்ளும் மின் கல வண்டிகள் உள்பட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் ஷஜீவனா, துணை ஆட்சியர் ரஜத் பீடன், மாவட்ட திட்ட இயக்குநர் அபிதா ஹனீப்,மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவக்குமார்,மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் காமாட்சி, தேனி அல்லிநகரம் நகராட்சி தலைவர் ரேணுப்பிரியா பாலமுருகன், வீரபாண்டி பேரூராட்சி தலைவர் கீதாசசி, தேனி நகர் திமுக செயலாளர் நாராயண பாண்டியன், தேனி அல்லிநகரம் நகராட்சி துணை தலைவர் செல்வம் உள்பட அரசு துறை அதிகாரிகள், பணியார்கள் , தி.மு.க நிர்வாகிகள் , விளையாட்டு வீரர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தாம்பரத்தில் மனிதநேய மக்கள் கட்சியின் 17ஆம் ஆண்டு துவக்க விழாவை முன்னிட்டு அரசியல் பயிலரங்கம்




தாம்பரம் பிப்14

செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் தாம்பரத்தில் மனிதநேய மக்கள் கட்சி இளைஞர் அணி சார்பாக மாபெரும் அரசியல் பயிலரங்கம் மாவட்ட இளைஞர் அணி செயலாளர் யு.முகமது ரபிக் தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தொண்டர் அணி செயலாளர் ஐ.அசாருதீன் அவர்கள் வரவேற்புரை ஆற்றினார்கள்.

இளைஞர் அணி மாவட்ட துணை செயலாளர் எம்.முஹம்மதுரபிக், ஜே.ரஃபிக் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். சிறப்பு அழைப்பாளர்களாக மனிதநேய மக்கள் கட்சியின் மாநில துணை பொது செயலாளர் தாம்பரம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் தாம்பரம் எம்.யாக்கூப், விடுதலை சிறுத்தைகள் கட்சி துணை பொதுச்செயலாளர் வன்னி அரசு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணை பொதுச்செயலாளர் மல்லை சி.ஏ.சத்யா, மனிதநேய மக்கள் கட்சி மாநில அமைப்பு செயலாளர் வழக்கறிஞர் புழல்.சேக் அலி முகம்மது ஆகியோர் கலந்துகொண்டு இளைஞர்களுக்கு அரசியல் பயிலரங்கம் வகுப்பு எடுத்தார்கள்.

மேலும் செங்கல்பட்டு வடக்கு மாவட்ட தலைவர் எஸ்.கே.ஜாகிர் உசேன், காஞ்சி மாவட்ட தலைவர் ஜெ.சலீம் கான், மாநில இளைஞர் அணி செயலாளர் எஸ்.தமிம் அன்சாரி, மனிதநேய மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் எம்.அப்துல் ரஹீம், மாநில வழக்கறிஞர் அணி செயலாளர் எம்.முஜிபூர் ரஹ்மான் ஆகியோர் கலந்துகொண்டனர் இறுதியாக தாம்பரம் மத்திய பகுதி இளைஞரணி செயலாளர் எம்.தஸ்தகீர் நன்றி உரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் இளைஞர்கள் திரளாக கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..





சிவகங்கை மாவட்டம் (187) மானாமதுரை சட்டமன்ற தொகுதியின் மானாமதுரை திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் கூட்டம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் தமிழரசி ரவிக்குமார்,நகர் செயலாளர் பொன்னுச்சாமி, திருப்புவனம் பேரூராட்சி தலைவர் சேங்கை மாறன்,மானாமதுரை நகர் மன்ற துணைத் தலைவர் பாலசுந்தரம் மற்றும் திமுக நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்..

## கன்னியாகுமரியில் காமராஜர் கல்வெட்டு துணை உடைத்தவர்கள் மீது தமிழ்நாடு மக்கள் நீதி பாதுகாப்பு சங்கத்தின் சார்பாக கண்டனம்

மதுரை பிப்.14



கன்னியாகுமரி மாவட்டம் மாத்தூர் தொட்டி பாலம் இது 1966 ம் ஆண்டு கல்வி தந்தை பெருந்தலைவர் கு.காமராஜர் ஆட்சி காலத்தில் கட்டப்பட்டது. இதன் நினைவாக அவர் புகைப்படம் வைத்த கல்வெட்டு தூண் நிறுவப்பட்டு இருந்தது. இந்த கல்வெட்டு தூண் மர்ம நபர்களால் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்து செல்வது உண்டு. இந்த சுற்றுலா தளத்தில் மக்கள் பாதுகாப்புக்காக எந்த ஒரு கண்காணிப்பு கேமராக்களும் கிடையாது. பொதுமக்களுக்கு எந்த ஒரு பாதுகாப்பும் இல்லாத சூழ் நிலையில் திருவட்டார் ஊராட்சி நிர்வாகம் வருடம் தோறும் ஏலம் அறிவித்து அதன் தொகையை பெற்று கொண்டு எந்த ஒரு கட்டுப்பாடுகளும் இல்லாமல் நடைபெற்று வருகின்றது. ஏலம் எடுக்கும் பணம் என்ன ஆச்சு??.இந்த பிரச்சனையினை காவல் துறை அதிகாரிகள் மாவட்ட நிர்வாகம் உடனடியாக தலையிட்டு சுற்றுலா வரக்கூடிய பொதுமக்களுக்கு பாதுகாப்பினை பலப்படுத்த வேண்டும். உடைக்கப்பட்ட பெருந்தலைவர் கு.காமராஜர் கல்வெட்டு அதே இடத்தில் நிலவ வேண்டும் என்று தமிழ்நாடு மக்கள் நீதி பாதுகாப்பு சங்கம் சார்பாக கௌரவ தலைவர் குணா கோரிக்கை விடுத்தார் .முறையான நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் தமிழக முதல்வருக்கு இந்த பிரச்சனை யினை தமிழ்நாடு மக்கள் நீதி பாதுகாப்பு சங்கத்தின் சார்பில் கொண்டு சென்று தீர்வு கிடைக்க நடவடிக்கை மேற்கொள்வோம் என்பதை தெரிவித்து கொண்டனர்.

## தாம்பரம் மாநகர தெற்கு பகுதி சார்பில் தேமுதிக 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா மற்றும் கொடிநாள் கொண்டாட்டம்



தாம்பரம் பிப்14

தேசிய முற்போக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தின் 25 ஆம் ஆண்டு வெள்ளி விழா மற்றும் கொடிநாள் விழா செங்கல்பட்டு மாவட்ட தேமுதிக செயலாளர் அனகை முருகேசன் ஆலோசனை யின்படி தாம்பரம் மாநகரத்திற்கு தெற்கு பகுதி சார்பில் பகுதி செயலாளர் கேட் எம் தர்மா தலைமையில் பகுதி துணை செயலாளர்கள் டி.ஏழுமலை, ஐ.கே.தர்மா ஆகியோரின் முன்னிலையில் 63வது வட்ட செயலாளர் குமார், வட்ட அவைத் தலைவர் தேன் என்ற லட்சுமிகாந்த் வரவேற்புரையில் கிழக்கு தாம்பரத்தில் கொண்டாடப்பட்டது வெள்ளிவிழா மற்றும் கொடிநாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில் தேமுதிக கொடியேற்றி பொதுமக்களுக்கு வாகன ஓட்டிகளுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர் இதில் பகுதி நிர்வாகிகள் துணைச் செயலாளர் தமிழரசி,மாவட்ட வழக்கறிஞர் பிரிவு துணை சுஜாதா நந்தினி,பகுதி மாவட்ட பிரதிநிதி பாலமுருகன், பகுதி மகளிர் அணி செயலாளர் டாக்டர் சுமதி, கேப்டன் மன்றம் டாக்டர் நெருப்பூர் ராஜேந்திரன் நிர்வாகி கலைவாணி, ஆறுமுகம், 63வது வட்ட பொருளாளர் பாபு, வட்ட துணை செயலாளர்கள் ஏழுமலை, சரிதா, அசோக், கேப்டன் மன்ற செயலாளர் முருகன், துணைச் செயலாளர் பிரகலாதன், வட்ட பிரதிநிதி விஜி, கார்த்திகேயன், கார்த்தி, குமரேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..

# மதுரை மாநகராட்சி வரிகளை மக்கள் தங்களது இருப்பிடத்தில் இருந்தே வருவாய் உதவியாளர்களின் POS இயந்திரம் மூலம் செலுத்தும் வசதி.

மதுரை பிப் 14




மதுரை மாநகராட்சி பகுதிகளில் உள்ள பொதுமக்களிடமிருந்து வசூலிக்கப்படும் சொத்து வரி, குடிநீர் மற்றும் பாதாளச் சாக்கடை பராமரிப்பு கட்டணம் ஆகிய வரி வருவாய் இனங்கள் மூலமும், வரியில்லாத வருவாய் இனங்கள் மூலமும் மாநகராட்சியில் பல்வேறு அடிப்படை வளர்ச்சித் திட்டப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மதுரை மாநகராட்சிக்கு 2024 - 2025 ஆம் ஆண்டுக்கு செலுத்தப்பட வேண்டிய வரி இனங்களை பொதுமக்கள் எளிதாக செலுத்தும் வகையில் மாநகராட்சி வருவாய் உதவியாளர்களுக்கு POS இயந்திரம் வழங்கப்பட்டுள்ளது.

இதனை பயன்படுத்தி பொதுமக்கள் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி, குடிநீர் வரி மற்றும் பாதாள சாக்கடை பராமரிப்புக் கட்டணம், தொழில்வரி, சேவைக்கட்டணம் ஆகியவற்றை பொதுமக்கள் தங்களின் இருப்பிடத்தில் இருந்தே வருவாய் உதவியாளர்கள் வைத்துள்ள றிளிஷி இயந்திரம் மூலம் CREDIT CARD, DEBITCARD, UPIID மற்றும் QR SCAN மூலமாக வரிகளை செலுத்தி மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகளுக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

எனவே பொதுமக்கள் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய வரிகளை உடனடியாக தங்கள் இருப் பிடத்தில் இருந்தே செலுத்தி மாநகராட்சியின் வளர்ச்சிப் பணி களுக்கு முழு ஒத்துழைப்பு தருமாறு மதுரை மாநகராட்சி யின் சார்பில் கேட்டுக் கொண்டனர்.

# மானாமதுரை அருகே இளைஞர் மீது கொடூர தாக்குதல் நடத்தியவர்கள் கைது



மானாமதுரை, பிப்.14

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே மேலபிடாவூர் கிராமத்தைச் சேர்ந்த ராமன் மகன் அய்யச்சாமி(19)இவர் கல்லூரிக்கு இருசக்கர வாகனத்தில் சென்று வருவது வழக்கமாகும். நேற்று வழக்கம்போல தனது கிராமத்திற்கு சென்று கொண்டிருந்தபோது வயதான முதியவர் சாலையின் குறுக்கே வந்துள்ளார். முதியவரை கவனமாகச் செல்லுங்கள் என்று கூறியதை பின்னால் வந்தவர்கள் தவறாக எண்ணி அய்யாச்சாமி மீது வினோத் கண்ணன் மற்றும் ஆதிஸ்வரன் கொடூரமான முறையில் தாக்கியுள்ளனர். பலத்த காயமடைந்த அய்யாசாமி சிகிச்சைக்காக அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அய்யாசாமி தாயாரின் அளித்த புகாரின் பேரில் வினோத் கண்ணன் மற்றும் ஆதிஸ்வரனை காவல்துறையினர் நேற்று கைது செய்தனர்..



தேனி மாவட்டம் புதிய மாவட்ட ஆட்சியராக ரஞ்சித் சிங் நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார்..

# மாசி மாத ஐந்து நாட்களுக்கு சபரிமலை நடை திறப்பு

கம்பம், பிப்.14

கேரள மாநிலத்தில் பத்தனம்திட்டா மாவட்டத்தில் அமைந்துள்ள ஐயப்பன் கோயில் மாசி மாத பூஜைக்காக சபரிமலை ஐயப்பன் கோவில் நடை திறப்பு 5 நாட்கள் பக்தர்கள் தரிசனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. சபரிமலை ஐயப்பன் கோயிலில் மண்டல, மகரவிளக்கு கால பூஜைகளுக்குப் பின்னர் கடந்த மாதம் ஜனவரி 20ல் ஆம் தேதி நடை சாத்தப்பட்டது. இந்த நிலையில் மாசி மாதத்தை முன்னிட்ட மாதாந்திர பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் நடை திறக்கப்பட்டது. கோயில் மேல் தந்திரி கண்டரர், ராஜீவரர் முன்னிலையில் மேல்சாந்தி அருண்குமார் நம்பூதிரி தீபம் காண்பித்தார்.



தேனி அஇஅதிமுக கிழக்கு மாவட்ட இளைஞர் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கழகத்தின் போர்வாள் அப்பாஸ் மைதீன் பிறந்த நாளை முன்னிட்டு தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே காலேஜ் விலக்கில் உள்ள மாவட்ட பாசறை அலுவலகத்தில் பிறந்தநாள் விழாவை கொண்டாடினார்.இந்நிகழ்வில் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் வழக்கறிஞர் தவமணி,பெரியகுளம் ஒன்றிய துணை செயலாளர் செல்லப்பாண்டி ,தாமரைக்குளம் பேரூர் கழக செயலாளர் மனோகரன், மாவட்ட மகளிர் அணி துணைச் செயலாளர் பங்கஜவள்ளி,நகர அம்மா பேரவை செயலாளர் ஜெயசீலன், முன்னாள் பேரூர் கழக செயலாளர் ராம தண்டபாணி,தாமரைக்குளம் தங்கப்பாண்டி, மற்றும் கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.




பெருந்தலைவர் காமராஜர் ஆட்சியில் கட்டப்பட்டு திறந்து வைக்கப்பட்ட ஆசியாவிலேயே மிகப் பெரிய உயரமான கன்னியாகுமரி மாவட்டம் மாத்தூர் தொட்டி பாலத்தில் இருந்த கல்வெட்டை சில சமூக விரோதிகள் இரண்டு நாட்களுக்கு முன்பு உடைத்து விட்டார்கள். உடனடியாக கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் ஆலோசனையின் பேரில் பார்வையிட்டதின் அடிப்படையில் பொது பணி துறையின் சார்பில் கட்டுமான வேலை நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது.இப்பணியை வர்த்தக காங்கிரஸ் குமரி கிழக்கு மாவட்ட தலைவர் டாக்டர் சிவகுமார்,தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி விவசாய பிரிவு மாநில பொதுச் செயலாளர் ஆர்.எஸ்.ராஜன், ராமன்,லெட்சுமணன், பகவதி கண்ணு, திருவட்டார் மேற்கு வட்டார மகிளா காங்கிரஸ் தலைவி ஐடா ராணி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# செங்கல்பட்டு வேல்ஸ் பல்கலைக்கழகத்தின் சார்பாக சட்ட உதவி முகாம்



செங்கல்பட்டு, பிப்.14

வேல்ஸ் பல்கலைக் கழகத்தின் சார்பாக மூன்றாம் ஆண்டு சட்டக் கல்லூரி மாணவர்கள் ஏற்பாட்டில் சட்ட உதவி முகாம் அகரம் தென் பகுதியில் நடைபெற்றது

செங்கல்பட்டு மாவட்டம் அகரம் தென் ஊராட்சி பகுதியில் வேல்ஸ் பல்கலை கழகத்தின் சார்பாக மூன்றாம் ஆண்டு சட்டக் கல்லூரி மாணவர்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சட்ட உதவி முகம் மற்றும் பொது விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக சென்னை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் மற்றும் எழும்பூர் பூந்தமல்லி மற்றும் தாம்பரம் வழக்கறிஞர் சங்கம் சார்பில் பி.ஆர்.தினேஷ்குமார், எஸ்.ஆதிகேசவன், எஸ்.பவானி, சாந்தசீலன், நிஷா, ஆர்.சங்கர் சுப்பிரமணியம், எஸ்.சித்ரா, கே.மைதிலி ஆகியோர் கலந்து கொண்டு சட்ட ஒழுங்கு பிரச்சனைகளை எவ்வாறு அதை பயன்படுத்த வேண்டும் அதை சுட்டிக்காட்டி சிறப்புரையாற்றினார் இதில் ஏராளமான நரிக்குறவர்கள் பெண்கள் ஆண்கள் குழந்தைகள் உட்பட ஆர்வமாக பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்..



மதுரை மாநகராட்சி திரு.வி.க.மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு ஹனிவெல் நிறுவனத்தின் சார்பில் அறிவியல் உபகரணங்கள் தொகுப்பினை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் வழங்கினார்.அருகில் மேயர்இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், இ.ஆ.ப., , மண்டலத் தலைவர் சரவண புவனேஸ்வரி , கல்விக்குழுத் தலைவர் ரவிச்சந்திரன் , மாமன்ற உறுப்பினர் மகாலெட்சுமி ஆகியோர் உடன் உள்ளனர்.

# குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்க அழகப்பா கல்லூரி மாணவிகளுக்கு கல்லூரி முதல்வர் பாராட்டு

காரைக்குடி, பிப்.14





நம் நாட்டின் 76 ஆவது குடியரசு தின விழாவினை முன்னிட்டு டெல்லியில் நடைபெற்ற குடியரசு விழா அணிவகுப்பிலும், சென்னை மெரினாவில் நடைபெற்ற குடியரசு விழா அணி வகுப்பிலும் பங்கேற்று சிறப்பித்த காரைக்குடி தேசிய மாணவர் படை ஒன்பதாவது பட்டாலியனைச் சார்ந்த சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் மூன்றாம் ஆண்டு இளங்கலை வரலாறு பயிலும் தேசிய மாணவர் படை மாணவி ஜீவகப்பிரியா மற்றும் மூன்றாம் ஆண்டு இளங்கலை வணிகவியல் பயிலும் தேசிய மாணவர் படை மாணவி நிர்மலா ஆகியோரை கல்லூரியின் முதல்வர் முனைவர் பெத்தாலெட்சுமி, கல்லூரியின் தேசிய மாணவர் படை பொறுப்பாளர் முனைவர் சரவணன் மற்றும் பேராசிரியர்களும் ஆசிரியரல்லாப் பணியாளர்களும் பாராட்டி வாழ்த்தினர்.

# மேற்கு தாம்பரத்தில் உள்ள அடாப்ட் ஹோம் குடி, போதை மறுவாழ்வு மையத்தின் 14வது ஆண்டு விழா

தாம்பரம் பிப்14




மேற்கு தாம்பரத்தில் உள்ள அடாப்ட் ஹோம் குடி, போதை மற்றும் மறுவாழ்வு மையத்தின் 14வது ஆண்டு விழா வெகு சிறப்பாக நடைப்பெற்றது.

சென்னை மேற்கு தாம்பரத் தில் அடாப்ட் ஹோம் குடி, போதை மற்றும் மறுவாழ்வு மையத்தின் 14வது ஆண்டு தொடக்க விழா வெகு சிறப்பாக அடாப்ட் ஹோமில் நடை பெற்றது.நிகழ்ச்சிக்கு அடாப்ட் ஹோமின் இயக்குனர் டாக்டர் எஸ்.முருகன் மற்றும் நிர்வாக இயக்குனர் மகாலட்சுமி ஆகி யோர் தலைமை தாங்கினார்.

நிகழ்ச்சியின் தொடக்கமாக 14வது ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. அதனை தொடர்ந்து மையத்தில் சிகிச்சை பெற்று வருபவர்களிம் ஆடல், பாடல் மற்றும் நடன நிகழ்ச்சியில் பலர் ஆர்வத்துடன் கலந்துகொண்டு நடனமாடினர்.

இறுதியாக அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

அதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அடாப்ட் ஹோமிம் இயக்குனர் டாக்டர் எஸ்.முருகன் கூறுகையில்,

போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களும், போதை பழக்கத்தால் மன நலம் பாதிக்கப்பட்டவர்களுக்கும் இந்த மையத்தில் சிறப்பாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை சுமார் 7 ஆயிரம் பேருக்கு இந்த மையம் மூலம் சிறப்பாக சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் சிறந்த முறையில் திருந்தி போதை பழக்கத்தை கைவிட்டு தற்போது குடும்பத்தினருடன் சந்தோஷமாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்த பணியை இறைவனின் சேவையாக தொடர்ந்து 13 ஆண்டுகள் நிறைவு செய்து, தற்போது 14வது ஆண்டில் அடி எடுத்து வைத்துள்ளோம். நிச்சயமாக தொடர்ந்து குடி மற்றும் போதை பழக்கத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அந்த தீய பழகத்தில் இருந்து விடபட சிறந்த மனநல மருத்துவர்கள் மற்றும் அவர்களுக்கு தேவையான மருந்துகள் மூலம் சிறந்த முறையில் சிகிச்சை அளித்து அவர்களை குணப்படுத்த முடியும். எந்த பழகத்திற்கு அடிமையாலும், அவற்றில் இருந்து மீள்வது கடினம். அப்படிப்பட்ட சூழ்நிலையிலும் குடிபழக்கத்தில் இருந்துபலரை மீட்டுள்ளோம் என்றார்.

மாலை தந்தி






மதுரை உலகத் தமிழ்ச் சங்கம் மற்றும் அல்அமீன் மேல்நிலைப்பள்ளி இணைந்து நடத்திய 'தமிழ்க்கூடல்151' நிகழ்வு உலகத் தமிழ்ச்சங்க கூட்ட அரங்கில் நடைபெற்றது. ஆய்வறிஞர் சோமசுந்தரி வரவேற்புரையாற்றினார். உலகத் தமிழ்ச் சங்க இயக்குநர் ஔவை ந.அருள் தலைமை வகித்தார். அல்அமீன் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் ஷேக் நபி முன்னிலை வகித்தார். பேராசிரியர் கதிரேசன் "அயலகத் தமிழர்களின் பணிகளும் படைப்புகளும்" என்ற தலைப்பில் உரை நிகழ்த்தினார். அல்அமீன் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் கலந்து கொண்டனர். ஆய்வு வளமையர் ஜான்சிராணி நன்றியுரையாற்றினார்.




ராமநாதபுரம் மாவட்டம் கமுதியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் நலத்திட்ட உதவிகள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டது.ராமநாதபுரம் மாவட்ட மருத்துவரணி மாவட்ட தலைவர் கார்த்திகேயன் தலைமையில் நடைபெற்றது பள்ளி மாணவ, மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கி கல்விச் சார்ந்த பொருட்கள்,பொது மக்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.






தேனி மாவட்டம் பெரியகுளம் கைலாசபட்டி அருகில் அமைந்துள்ள இந்து சமய அறநிலையத்துறைக்கு பாத்தியப்பட்ட கைலாசநாதர் மலைக்கோயிலில் தை மாத பௌர்ணமியை முன்னிட்டு கிரிவலம் நடைபெற்றது. தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் கலந்துகொண்டு சாமி தரிசனம் செய்து பக்தர்களுக்கு அன்னதானத்தை துவக்கி வைத்தார். கோயிலுக்கு வந்திருந்த பக்தர்கள் கூட்டு வழிபாடும் உலக நன்மை கருதி சிறப்பு வழிபாடுகளும் செய்தனர். இந்நிகழ்ச்சி ஏற்பாடுகளை அன்பர் பணி செய்யும் பராமரிப்பு குழுவினர்கள் செய்திருந்தனர்.




திருநெல்வேலி மாவட்டம், மானூர் ஊராட்சி ஒன்றியம் குப்பக்குறிச்சி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.43 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள கிராம ஊராட்சி செயலக கட்டடத்தினை மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.இரா.சுகுமார், பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.



கோவை மாவட்ட ஆட்சியராக பவன்குமார் க.கிரியப்பனவர் பொறுப்பேற்றுக் கொண்டார். அவருக்கு அதிகாரிகள் பணியாளர்கள் வாழ்த்துகளை தெரிவித்துக் கொண்டனர்.

## தூய்மை பணி மேற்பார்வையாளர்களின் நன்னடத்தையை பாராட்டிய நெல்லை மேயர்



நெல்லை பிப் 14

பாளையங்கோட்டை மண்டலம் வார்டு 36ல் உள்ள அண்ணா நகர் ஆனந்த சக்தி விநாயகர் கோவிலில் மர்ம ஆசாமி ஒருவன் பூட்டை உடைத்து விளக்கு மற்றும் பூஜை பொருட்களை திருடி சென்றுள்ளான். இந்நிலையில் நேற்று (12.2.25) காலை கோவில் அருகே துணி பையில் திருடப்பட்ட பொருட்கள் கிடந்தது. இதை அப்பகுதியில் தூய்மை பணி மேற்கொண்ட .மாரியப்பன் கண்டெடுத்து தூய்மை பணி மேற்பார்வையாளர் ஜெயராம் அவர்களுக்கு தகவல் தெரிவித்து மாமன்ற உறுப்பினர் .சின்னத்தாய் அவர்களிடம் தகவல் தெரிவித்து உடனடியாக கணவர் கிருஷ்ணன் அவர்கள் உதவியுடன் பாளை ஹைகிரவுண்ட் போலிசாருக்கு தகவல் தெரிவித்தார்கள்.

இது குறித்து பத்திரிகைகளில் செய்தி பிரசுரமானது. மேயர் கோ.ராமகிருஷ்ணன் மேற்படி தூய்மை பணியாளர் மற்றும் மேற்பார்வையாளரை மாநகராட்சி மைய அலுவலகத்தில் வைத்து அவர்களின் நன்னடத்தையை பாரட்டி சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்கள்.

மாமன்ற உறுப்பினர்கள் .மாரியப்பன் அவர்கள், .மன்சூர் அவர்கள், சுகாதார ஆய்வாளர் நடராஜன் அவர்கள், மற்றும்.வி.கிருஷ்ணன் அவர்கள், .அப்துல் சுபஹானி அவர்கள், .குணா அவர்கள், மேயரின் உதவியாளர் ஷேக் பிள்ளை அவர்கள் உட்பட பலர் உடனிருந்தார்கள்

## பாவூர்சத்திரம் அருகே 10 அடி நீள மலைப்பாம்பு பிடிபட்டது



தென்காசி, பிப்: 14

தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் அருகே ராமச்சந்திரபட்டினத்தில் ராமச்சந்திரன் என்பவருக்கு சொந்தமான நர்சரி கார்டனில் 10 அடி நீளம் உள்ள மலைப்பாம்பு இருந்ததாக கிடைத்த தகவலின் பேரில் தென்காசி தீயணைப்பு துறை சிறப்பு நிலைய அலுவலர் ஜெயரத்தினகுமார் தலைமையில் ஜெயபிரகாஷ் பாபு, மாதவன், கார்த்தியன் ஆகியோர் விரைந்து சென்று மலைப்பாம்பை பிடித்து வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்

## பஞ்சமி நிலத்தை நான் வாங்கவில்லை! செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்த ஓபிஎஸ்

பெரியகுளம், பிப்.14



தேனி மாவட்டம், பெரியகுளம் அருகே கைலாசப்பட்டியில் உள்ள பண்ணை வீட்டில் , தமிழக முன்னாள் முதல்வரும், அதிமுக தொண்டர்கள் உரிமை மீட்பு குழு ஒருங்கிணைப்பாளருமான ஓ.பன்னீர்செல்வம் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது கடந்த சில நாட்களாக பஞ்சமி நிலத்தை நான் பெற்றதாக குற்றம் சாட்டி வெளிவந்த செய்திகள் குறித்து விளக்கமளித்தார்.நில உச்சவரம்பு சட்டத்தின் கீழ் நிலம் இல்லா ஏழை எளியவர்களுக்காக அரசு வழங்கிய நிலமாகும். நாளடைவில் நிலத்தின் உரிமையாளர்களே நிலத்தினை பெற்று அவற்றை பங்கு பிரித்து நிலத்தின் மூதாதையரான ஜெயலட்சுமி என்பவரது பின்வாரிகள் பெயரில் 40, 41 செண்டுகள் என இரண்டாக பிரிக்கபட்டு அவை மாற்று சமூகத்தைச் சார்ந்த வேறொரு நபரது பெயரில் பத்திரம் ஏற்பட்டு பின்னாளில் அவற்றை நான் கடந்த 2022 ல் விலைக்கு வாங்கினேன்.

மேலும் மேற்படி நிலத்தில் பிரச்சினைகள் இருப்பது எனது கவனத்திற்கு தெரியவர கடந்த 2024ம் ஆண்டு ஜூலை மாதம் எவர் ஒருவரிடம் இருந்து நிலத்தை பெற்றேனோ, அவரிடமே நிலத்தை விற்று விட்டேன். ஆகவே அந்த நிலத்திற்கும் எனக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. தற்போது வரை அவை பஞ்சமி நிலமில்லை. மேலும் எஸ்ஸி, எஸ்டி ஆணையம் சார்பில் எனக்கு எந்த ஒரு கடிதமும் வழங்கவில்லை என தெரிவித்தார். அதிமுகவில் நான், எடப்பாடி பழனிச்சாமி, சசிகலா, டிடிவி தினகரன் ஆகிய அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்பது அதிமுக தொண்டர்களின் கூக்குரலாக உள்ளது என்றும் தன்னைப் பொறுத்தவரை அதிமுகவில் இணைவதற்கு எந்த விதமான நிபந்தனையும் இல்லை என்று தெரிவித்தார். மேலும் அதிமுகவில் அனைவரும் ஒன்றிணைந்தால் தான் அஇஅதிமுகவுக்கு வாழ்வு. இல்லையென்றால் அனைவருக்கும் தாழ்வு தான் " எனக் கூறினார்.





மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.56 கரிமேடு மார்க்கெட் அருகில் மத்திய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து புதிதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கூடத்தினை தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் அருகில் மேயர் இந்திராணி பொன்வசந்த் , ஆணையாளர் சித்ரா விஜயன், துணை மேயர் தி.நாகராஜன் , மண்டலத் தலைவர் பாண்டிச்செல்வி , மாமன்ற உறுப்பினர் ஜென்னியம்மாள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## நெல்லையில் புதுமை குழந்தைகளுக்கும் ஹெல்மெட் விழிப்புணர்வு நிகழ்ச்சி




நெல்லை பிப் 14

நெல்லையில் குழந்தைகளுக்கும் ஹெல்மெட் அணிய வேண்டும் என்று புதுவிதமான விழிப்புணர் நிகழ்ச்சி நடந்தது இந்நிகழ்ச்சியை அருணா கார்டியா கேர் மருத்துவமனை நடத்தியது நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக மேற்கு மண்டலம் உதவி ஆணையாளர் வினோத் சாந்த ராம் கலந்து கொண்டார் நிகழ்வில் அவர் பேசியதாவது இருசக்கர வாகனத்தில் செல்லும்போது குழந்தைகளும் தலைக்கவசம் அணிந்து செல்வது காலச்சிறந்ததாகும் ஏனென்றால் ஒரு பைக் விபத்து ஏற்பட்டால் குழந்தைகள்தான் முதலில் அடிபடுவர் ஆகையால் அவர்களுக்கும் தலைக்கவசம் அணிவது நல்ல செயல் ஆகும் மேலும் அருணா கார்டியாக் கேர் மருத்துவமனை டாக்டர் அருணாச்சலம் பேசும்போது பெற்றோர்கள் குழந்தைகளுக்கும் கட்டாயம் ஹெல்மெட் வாங்கி பழக்கத்தை கொண்டு வர வேண்டும் இதனால் குடும்பத் தலைவர் மட்டும் இல்லாமல் குடும்பமே காக்கப்படும் என்பது காலச்சிறந்தது ஆகையால் இந்த குழந்தைகளுக்கும் தலைக்கவசம் என்ற விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்துவதில் பெருமை கொள்கிறேன் என்று கூறினார் போக்குவரத்து உதவி ஆணையாளர் அசோக் குமார் மேலும் நிகழ்ச்சியில் நிர்வாக இயக்குனர் சுவர்ணலதா அருணாச்சலம் மற்றும் ஊழியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்

## திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை ஒன்றியத்தில் வளர்ச்சித் திட்டப்பணிகளை, மாவட்ட ஆட்சியர் நேரில் ஆய்வு

திண்டுக்கல், பிப்.14



திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் செ.சரவணன், செய்தியாளர்களுடன் சென்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்துவார்பட்டி ஊராட்சியில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பீட்டில் மண் வரப்பு அமைக்கும் பணிகளையும், வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கிராமங்களில் கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தில் ரூ.3.50 இலட்சம் மதிப்பீட்டில் 189 வீடுகள் என மொத்தம் ரூ.6.61 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பணிகளையும், வடமதுரை ஊராட்சி ஒன்றியம், பிலாத்து ஊராட்சியில் பிரதம மந்திரி வீடு கட்டும் திட்டத்தின்கீழ் ரூ.2.40 இலட்சம் மதிப்பீட்டில் 26 வீடுகள் என மொத்தம் ரூ.62 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் பணிகள் மற்றும் பிலாத்து ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் வடமதுரை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கொசவபட்டி ஊராட்சியில் ஊரக வீடுகள் பழுது பார்க்கும் திட்டத்தின்கீழ் ரூ.1.36 கோடி மதிப்பீட்டில் 209 வீடுகளில் நடைபெற்று பழுது பார்க்கும் பணிகள் மற்றும் குளத்தூர் ஊராட்சி மன்ற அலுவலகத்தையும் மாவட்ட ஆட்சித்தலைவர் .செ. சரவணன், நேரில் பார்வையிட்டு, ஆய்வுமேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, உதவி இயக்குநர் ( ஊராட்சிகள் ) .ஐ.நாகராஜன், வட்டார வளர்ச்சி அலுவலர் சுப்பிரமணி, வட்டார வளர்ச்சி அலுவலர்(வளர்ச்சி) கண்ணன் மற்றும் துறை அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

Printed , published by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161